**செய்தி வெளியீடு எண்: 938** **நாள்:07.12.2020**

இன்று 07.12.2020 தமிழ்நாடு அரசு திட்டக் குழுவின் துணைத் தலைவர் திரு சி. பொன்னையன் அவர்கள் சென்னை அரசு அருங்காட்சியகத்திற்கு வருகைபுரிந்து, TANII நிதி திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களை பார்வையிட்டு ஆய்வு கூட்டம் நடத்தினார்கள்.

மேற்படி ஆய்வுக் கூட்டத்தில் அருங்காட்சியகங்களின் ஆணையர் திரு ம.சு. சண்முகம், இ.ஆ.ப., உதவி இயக்குநர்கள் மற்றும் திட்டக் குழுவின் அலுவலர்கள் பங்கேற்றனர். ஆய்வுக் கூட்டத்திற்கு முன்னதாக ஆணையர் திட்டக் குழு துணைத் தலைவர் மற்றும் அனைவரையும் வரவேற்றார். ஆய்வுக் கூட்டத்தில் அருங்காட்சியகத்தின் செயல்பாடு மற்றும் TANII நிதி உதவியில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு ஆலோசனை வழங்கினார்.

பின்னர் திட்டக் குழு துணைத் தலைவர் அவர்கள் அருங்காட்சியகத்தில் நடைபெற்று வரும் TANII நிதிஉதவி திட்டங்களை பார்வையிட்டார். பின்னர் நடைபெற்று வரும் பணிகளை விரைவில் முடித்திடவும் அருங்காட்சியகத் திட்டங்களை பொதுமக்களுக்கு பெருமளவில் பயன்படும் வகையில் கொண்டு செல்ல தொழில்நுட்பத்தை பயன்படுத்தவும் அறிவுரை வழங்கினார்.

ஆய்வின் இறுதியில் ஆணையர் நன்றியுரை வழங்க ஆய்வுக் கூட்டம் நிறைவு பெற்றது.

ஆணையர்
அருங்காட்சியகங்கள் துறை

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**